பக்கங்கள்:-27

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 13 | சனிக்கிழமை | 27.01.2024 | அதிர்வு 179 |
|---|---|---|---|---|---|

## புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்





முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதி யில் இடம்பெற்ற விபத்தில் 06



## நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பெப்ரவரி 7 வரை ஒத்திவைப்பு

### அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பெப்ரவரி 7 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இடம்பெறும். ஜனாதிபதியே 06

# சிக்கலுக்குத் தீர்வு காண சகலரும் முன்வாருங்கள்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

**“அரசியல் கட்சிகள் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்த நாட்டின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நிலவிலிருந்து அரிசி கொண்டு வருவதாகக் கட்டுக் கதைகளைக் கூறி அதனைச் செய்ய முடியாது. தற்போது எம்மால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு இணங்க முடியுமா? அல்லது அவற்றை மாற்றியமைக்க வேண்டுமா? என்பது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஆலோசிக்க வேண்டும்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.** 06




## காரைநகர் கடற்பரப்பில் கைதான 12 இந்திய மீனவர்களும் விடுவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட12 இந்திய மீனவர்கள் நிபந்தனைகளுடன் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் 12 பேரையும் ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் 06



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய நாள் இன்று. கட்சியின் செல்நெறியைத் தீர்மானிக்கப் போகும் நாள் என்றும் கூறலாம்.

கட்சியைக் கட்டுக்கோப்பாக – பல தரப்பினரையும் அரவணைத்து – ஐக்கியமாக – அதன் புதிய தலைவர் சிறீதரன் கொண்டு நடத்தப் போகின்றாரா அல்லது கட்சி பிளவுண்டு நிற்கப் போகின்றதா என்பதை இன்றைய நடவடிக்கைகள் தீர்மானிக்கப் போகின்றன. 06



# சர்வதேச சுங்கத் தின நிகழ்வு

கொழும்பு சுங்கத் தலைமையகத்தில் நேற்று சர்வதேச சுங்கத் தின நிகழ்வு நடைபெற்றது. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.


















# விலா எலும்புகளை 22 துண்டுகளாக உடைத்து பெற்ற தாயைத் தாக்கிக் கொலை செய்த மகன்

## நாவலப்பிட்டியில் கொடூரம்

கண்டி, நாவலப்பிட்டி பிரதேசத்தில் தாயைக் கொடூரமாகத் தாக்கிப் படுகொலை செய்துள்ளார் மகன்.

நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.செல்லம்மா என்ற 67 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பில் 41 வயதுடைய உயிரிழந்தவரின் இளைய மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது தாயைப் பலமாக தாக்கியதில் அவரது தலைப் பகுதியில் பல காயங்கள் ஏற்பட்டுள்ளன எனவும், அவரது விலா எலும்புகள் 22 துண்டுகளாக உடைக்கப்பட்டுள்ளன எனவும் மரண விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனது தந்தையின் தலையில் பலமாகத் தாக்கியதில் காயமடைந்த தந்தை தனது மூத்த மகளின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், சந்தேகநபர் கடந்த 17 ஆம் திகதி தனது மனைவியைத் தாக்கியதில் அவரது மனைவி குழந்தைகளுடன் தனது தாயின் வீட்டுக்குச் சென்றுள்ளார் என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தாயுடன் வசித்து வந்த சந்தேகநபர் கடந்த 20 ஆம் திகதி அன்று தனது தாயுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில், தான் 16 வயதிலேயே கூலி வேலைக்கு அனுப்பப்பட்டார் எனவும், தன்னைப் பற்றி எவரும் கவலைப்படவில்லை எனவும் கூறி தாயைத் தாக்கியுள்ளார்.

பின்னர் அவர் தனிப்பட்ட வேலை ஒன்றுக்காக நாவலப்பிட்டி பிரதேசத்துக்குச் சென்று மதியம் 4 மணிக்கு வீடு திரும்பிய நிலையில் அவரது தாய் வீட்டுக்குள் உயிரிழந்து சடலமாகக் கிடந்துள்ளார்.

இந்நிலையில், சந்தேகநபர் இது தொடர்பில் அயலவர்களிடம் தெரிவித்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரிடம் தனது தாய் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட நிலையில் மரண விசாரணையில் உயிரிழந்தவர் பலமாகத் தாக்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நாவலப்பிட்டி பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.





# இணையவழி காப்புச் சட்டம் தொடர்பில் யாழில் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்

இணையவழி காப்புச் சட்டம், பயங்கரவாதத் தடுப்பு சட்டமூலம் பற்றிய தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ் ஊடக அமையம் மற்றும் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு படுத்தப்பட்டது.

இதன்போது இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வகுமார், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் துமிந்த சம்பத், சட்டத்தரணி கு.ஐங்கரன், காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத்தினர், அரசியல் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.










# சனத் நிஷாந்தவின் ஜீப்பின் சாரதிக்கு விளக்கமறியல்!

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உள்ளிட்டோர் பயணித்த ஜீப் ரக வாகனத்தின் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது மெய் பாதுகாவலர் ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் அவர்கள் பயணித்த ஜீப் ரக வாகனத்தின் சாரதி வெலிசர நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிப்பட்டுள்ளது.

மேற்படி சாரதி பொலிஸ் பாதுகாப்பின் கீழ் ராகமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

(மற்றொரு செய்தி 19 ஆம் பக்கத்தில்)

# பொலிஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் மர்ம நபர்கள் திடீரெனப் புகுந்து அடாவடி!

பொலிஸாரின் 'யுக்திய' பொலிஸ் விசேட நடவடிக்கைக்கு எதிராக கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மர்ம நபர்களினால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் யுக்திய நடவடிக்கைக்கு எதிராக நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டி, லிபர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் மௌனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது திடீரென்று அப்பகுதிக்கு வந்த ஒரு குழுவினர் போராட்டத்தைக் குழப்பியடிக்க முற்பட்டுள்ளனர்.

முகமூடி அணிந்த சில ஆண்கள் போராட்டக்காரர்களை குழப்ப முயன்றமையுடன், அவர்களின் போராட்டத்தை நிறுத்துமாறும் அச்சுறுத்தியுள்ளனர்.

அத்துடன் அந்தச்மர்ம நபர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவரையும் தாக்கியுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களிடமும் அவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மர்ம நபர்கள் போராட்டக்காரர்களை அச்சுறுத்தி அடாவடித்தனம் செய்து கொண்டிருந்த சமயத்தில் நீண்ட நேரம் கழித்து அவ்விடத்துக்கு வந்த பொலிஸார், குண்டர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கிய குற்றச்சாட்டில் எந்தவொரு நபரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் தேர்தலில் ஏற்பட்ட பிளவு – முரண்பாடு – கட்சிக்குள் தொடர்ந்தும் நீடிக்க போகின்றதா என்பது திருகோணமலையில் இன்று நடக்கும் கட்சியின் மத்திய குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களின் போது தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

கட்சித் தலைவர் பதவியேற்கும் சிறீதரனுக்குக் கட்சியை ஐக்கியப் படுத்திக் கொண்டு செல்ல ஆவன செய்யுங்கள் என்று பல தரப்புகளில் இருந்தும் கூறப்பட்டு விட்டன என அறிய வந்தது.

தலைவர் தெரிவுக்காக அணி சேர்ந்து, கன்னை பிரிந்த தரப்புகளின் அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுத்து, அடி பணிந்து, கட்சியின் பிளவு நிலையை நீடித்து, நிரந்தரமாக இடமளிப்பதா, இல்லையா என்பதை அவரே தீர்மானித்துக் கூட்டத்தை வழி நடத்த வேண்டும்.

நேற்று யாழ்ப்பாணத்தில் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோரின் வீடுகளுக்குத் தேடிச் சென்று சுமார் 10, 15 நிமிட நேரம் அவர்கள் ஒவ்வொருவருடனும் உரையாடி இருக்கின்றார் நாளை கட்சியின் புதிய தலைவர் பதவியை ஏற்கவிருக்கும் சிறீதரன்.

இந்தச் சந்திப்புக்களின் போதும் சரி, நேற்றுக் காலை சுமந்திரனுடன் தொலைபேசியில் சில நிமிடங்கள் உரையாடிய போதும் சரி, இன்றைய கூட்டத்தில் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு குறித்த விவரம் எதையும் சிறீதரன் கோடி காட்டவேயில்லை எனத் தெரிகின்றது. வெறுமனே, எல்லோருமாகச் சேர்ந்து இணக்கமாக இன்றைய கூட்டத்தை நடத்தி முடிக்க வேண்டும் என்று பொத்தம்பொதுவில் சிறீதரன் கூறியமையோடு விடயம் அடங்கி விட்டது.

சமரசமாக–சமாதானமாக–எல்லோரையும் அரவணைத்து – கட்சியை நடத்துகிறேன் என்று படம் காட்டுவது போல இந்த 'வீடு தேடி விசிட்' நடத்திய நிகழ்வு அமைந்துள்ள போதும், இவர்கள் அனைவருக்கும் – மாவை, சிவஞானம், குலநாயகம், சுமந்திரன், சத்தியலிங்கம் போன்ற அனைவருக்கும் – நிர்வாகிகள் பதவியில் எந்த இடமும் இல்லை என்பதுதான் இப்போது கட்சிக்குள் கை ஓங்கி இருக்கும் சிறீதரன் அணியின் திட்டம் என்கின்றன உள் வீட்டு வட்டாரங்கள். மத்திய குழு, அரசியல் குழு போன்றவற்றின் தெரிவுகளிலும் இந்த வெட்டுத் தொடரும் என எதிர்வு கூறப்படுகின்றது.

ஒரு புறம் கட்சிக்குள் இடமில்லை என்று புறமொதுக்கிக் கொண்டு, மறு புறம் வீடு தேடிச் சென்று அரவணைக்கும் பாவனை. நல்ல நடிகர்தான் நம் புதிய தலைவர்....!

ஆயினும் கட்சியின் பொதுக்குழு கூடிய விதம், அழைக்கப்பட்டோர், வாக்களிக்க அனுமதிக்கப்பட்டோர், கூட்டம் நடத்திய முறைமை எல்லாம் தீவிர கண்காணிப்புக்கும் பரிசீலனைக்கும் நுணுக்கமான பதிவுகளுக்கும் உள்ளாகி வருகின்றன. விளைவு – பிரதிபலிப்பு – பெப்ரவரியில் தெரிய வரலாம் என்கின்றன வேறு சில வட்டாரங்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

\+ \+ \+

நேற்று இந்தியக் குடியரசுத் தினம். கொழும்பில் இந்தியத் தூதரின் இல்லத்தில் வழமைபோல நேற்று மாலை நடந்த நிகழ்வில் கொழும்பின் அரசியல், இராஜதந்திர வட்டாரங்கள் பலவும் பிரசன்னமாகி இருந்தன. முன்னாள் ஜனாதிபதிகள் வரிசையில் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் கோட்டாபய ராஜபக்ஷவும் வந்திருந்தார். தமிழர்கள் தரப்பில் சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தென்பட்டனர்.

பதவியைத் துறந்த பின்னர் பொது நிகழ்வுகளில் பங்குபற்றாமல் அஞ்ஞாத வாசம் செய்து வந்த கோட்டாபய ராஜபக்ஷ அதை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கின்றார் போல.

ஆக, இனி அடிக்கடி அவரைப் பொது நிகழ்வுகளில் காணக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## நாடாளுமன்றக் கூட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பிரதாயபூர்வமாக சபை நடவடிக்கையை ஆரம்பித்து வைப்பார்.

இதேவேளை, 9ஆவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத் தொடர் நிறைவு செய்யப்பட்டுள்ளதால் அரச கணக்குகள் பற்றிய குழு உள்ளிட்ட பல நாடாளுமன்றக் குழுக்கள் கலைக்கப்படும்.

புதிய கூட்டத் தொடரின் பின்னர், ஜனாதிபதியால் அதற்கான உறுப்பினர் நியமனம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பு விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

உழவு இயந்திரமும் சிறிய ரக பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளான தில் வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் .

நேற்றுமுன்தினம் இரவு பட்டா ரக வாகனத்தில் பயணித்த மேற்படி இளைஞர் விபத்தில் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உழவு இயந்திரத்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான இரண்டு வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைநகர் கடற்பரப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலையில் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் முன்னிலைப்படுத்தினர்.

மீனவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை என்ற ரீதியில் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.

காரைநகர் கடற்பரப்பில் 3 மீன்பிடிப் படகுகளுடன் மீனவர்கள் 12 பேரும் கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழ்நாடு, புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர்.

குற்றம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஒரு படகின் உரிமையாளர் படகில் பயணித்துள்ளமையால், படகை பறிமுதல் செய்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய இரண்டு படகுகளின் உரிமையாளர்களும் படகில் இருக்காத காரணத்தால், அவர்களை முதலாவது சந்தேகநபராகக் கருதி வெளிவிவகார அமைச்சினூடாக அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த இரண்டு மீன்பிடிப் படகுகள் தொடர்பான உரிமை கோரல் வழக்கு மார்ச் மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் நீதிவான் அறிவித்துள்ளார்.

## சிக்கலுக்குத் தீர்வு காண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை விலகிக் கொண்டால் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மீண்டும் நம்பிக்கை வைக்க முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, அனைவரும் ஒன்றிணைந்து பொதுவான உடன்படிக்கையுடன் நாட்டை வெற்றிப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலுக்குத் தயாராகும்பட்சத்தில்நாட்டைஎவ்வாறுகட்டியெழுப்புவது என்பது தொடர்பில் திட்டமொன்று அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு சுங்கத் தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சர்வதேச சுங்க தின நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரி வருமானத்துக்காக சுங்கத் திணைக்களத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

சுங்க வரி, வற் வரி மற்றும் வருமான வரி ஆகிய மூன்றும் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் முக்கிய வருமான மூலங்கள் என்று சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கு சுங்கச் சேவையை வினைத்திறனாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் அரசால் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டங்கள் மற்றும் நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் என்பன அரச வருமானத்தை ஈட்டும் அனைத்து நிறுவனங்களையும் மாற்றியமைக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிறந்த சேவையை ஆற்றிய சுங்க அதிகாரிகளைப் பாராட்டி சான்றிதழ்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

இந்நாட்டின் அரச வருமானத்துக்கு விசேட ஏற்றுமதிப் பங்களிப்பை வழங்கிய நிறுவனங்களும் ஜனாதிபதியால் பாராட்டப்பட்டது.

அதனையடுத்து சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க:

07▸

## சிக்கலுக்குத் தீர்வு காண...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

“சுங்கத் திணைக்களம் இலங்கையின் பழமையான அரச திணைக்களங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சுமார் 2000 வருடங்களுக்கு முன்னர் பழைய மாந்தை துறைமுகத்தில் சுங்க வரி அறவிடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. எனவே அன்றிலிருந்து அனுராதபுர காலத்திலும், கோட்டே காலத்திலும், கண்டி காலம் முதல் இன்று வரை இந்த நாட்டின் இருப்புக்கு சுங்க வருமானம் பாரிய அளவில் பங்களித்துள்ளது.

2022 இல் நாம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவுவதற்கு சுங்கத் திணைக்களம் ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி கூற வேண்டும்.

சுங்க வரி, வற் வரி மற்றும் வருமான வரி ஆகியவை உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் மூன்று முக்கிய வருமான மூலங்களாக உள்ளன. இன்று சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள், பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் போன்ற அனைத்தின் மூலமும், நாம் எவ்வாறு வருமானத்தை அதிகரிப்பது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு தற்போதைய சுங்கச் சேவைகள் திறம்பட செயல்பட வேண்டும்.

சுங்கத் திணைக்களத்திற்கு கூடுதல் பணியாளர்களை வழங்க முடியாவிட்டாலும், செயல்திறன் ஊடாக எந்தளவு வருமானத்தை அதிகரித்துள்ளமை சிறப்புக்குரியது. நாம் இன்னும் வெகுதூரம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், விரைவில் நாம் கொண்டு வரவிருக்கும் புதிய சட்டத்தின் ஊடாக சுங்கம் மற்றும் ஏனைய வருமானத் திணைக்களங்களை முழுமையாக நவீனமயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இது என்பதைக் கூற வேண்டும். 2022இல் பொருளாதாரம் வீழ்ந்தது. எனினும், 2023இல் நாம் எடுத்த முடிவுகளினால் அந்த வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கான வழி ஏற்பட்டது. ஆனால், அது இன்னும் முடியவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதம் ஆக்குவோம். 2026இல் அதனை 15 வீதமாக அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

எனவே, தற்போதைய பொருளாதாரத்தில் இருந்து வருமானம் ஈட்ட வேண்டும். வருமானத்தை அதிகரிக்க, பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைவது என்ற கேள்வியை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். பழைய பொருளாதார முறையால் நாட்டை முன்னேற்ற முடியாது. ஒவ்வொரு நாளும் கடன் வாங்குவதால் நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. இந்த பொருளாதார முறையை மாற்ற வேண்டும்.

நாம் இன்னும் கடினமான காலத்திலேயே இருக்கிறோம். 2021இல் எங்களிடம் அத்தியாவசிய பொருட்கள் இருக்கவில்லை. எம்மிடம் உரம், எரிபொருள் இருக்கவில்லை. ஆனால் இன்று அவை உள்ளன. அதற்கு பணம் வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் இன்னும் வாழ்க்கைச் சுமையை உணர்கிறார்கள். பொருளாதார வளர்ச்சியுடன் இந்தப் பிரச்சினைகள் குறையும். 2022இன் பொருளாதாரச் வீழ்ச்சியில் இருந்து ஒரே தடவையில் மீள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் அது முடியாது. எனவே நாம் புதிய பொருளாதாரத்திற்குச் செல்ல வேண்டும்.

போட்டிச் சந்தையுடன், ஏற்றுமதியை அதிகரிக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெப்ரவரி 03 ஆம் திகதி தாய்லாந்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளோம். நம் நாட்டைப் போலவே தாய்லாந்தும் தேரவாத பௌத்த நாடு. ஆனால் அவர்கள் தனி வழியில் சென்றனர். நாங்கள் வேறு வழியில் சென்றோம். அதன் வேறுபட்ட பலன்களை இன்று காண்கிறோம்.

நாம் எடுக்கும் தீர்மானங்களினால் இந்த நாட்டின் எதிர்காலப் பொருளாதாரம் எவ்வாறு அமையும் என்பதைச் சிந்திக்க வேண்டும். நாம் கலந்துரையாட வேண்டும். அவை பற்றி அரசியல் கட்சிகள் கலந்தாலோசிக்க வேண்டும். அவர்கள் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்த நாட்டின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

நிலவிலிருந்து அரிசி கொண்டு வருவதாகக் கட்டுக் கதைகளைக் கூறி அதனைச் செய்ய முடியாது. தற்போது எம்மால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு இணங்க முடியுமா? அல்லது அவற்றை மாற்றியமைக்க வேண்டுமா? என்பது தொடர்பில் ஆலோசிக்க வேண்டும்.

நாம் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை கைசாத்திட்டுள்ளோம். அந்த ஒப்பந்தம் இன்னும் 15 – 16 நாடுகளுடன் கைசாத்திடப்படவுள்ளது. அதிலிருந்து நாம் விடுபட்டுச் செல்ல முடியாது. அதனை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது. அது தொடர்பில் நாம் அனைவரும் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால், இன்றும் எமது அரசியல், அப்பளத்தை போலவே உள்ளது. பொரித்தவுடன் அதனை எடுத்து சாப்பிடுகிறோம். மறுதினம் மற்றொன்றை போடுகிறோம் பின்னர் அதனை மறந்துவிடுவோம்.

சமூக ஊடகங்கள் தொடர்பிலான சட்டம் கொண்டுவரப்பட்ட போது நாட்டில் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகின்றது எனக் கூச்சலிட்டனர். இருப்பினும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அதனை அனைவரும் மறந்துவிட்டனர். அதே போல் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்பிக்கப்படவுள்ளது. இதன்போதும் மக்களின் உரிமை மீறப்படுகிறது, அனைவரையும் சிறையில் அடைக்கப் போகின்றார்கள் எனக் கூச்சலிடுவர். பின்னர் அதை மறந்துவிடுவார்கள்.

அதன் பின்னர் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் சமர்பிக்கப்படும் போது கல்வி ஒழிக்கப்படுவதாகக் கூச்சலிடுவர். பின்னர் மறந்துவிடுவார்கள். அப்பளத்தைப் போல் மேலே வந்த பின்னர் சத்தம் குறைந்து விடும். இந்த அரசியலுக்கு என்னால் முடிவுகட்ட முடியாது. இருப்பினும் அவ்வாறான அரசியலே எமது நாட்டின் இந்த நிலைக்குக் காரணம் என்பதை கூற முடியும்.

எமது நிலையிலிருந்து எழுந்து முன்னேறிச் செல்வதற்கான இயலுமை எமக்கு இருக்க வேண்டும். அதனால் உங்களுடைய எதிர்காலம் மாத்திரமின்றி உங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் சிறக்கும். அதனால் சர்தேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் அவசியமா? இல்லையா? மாற்றங்கள் அவசியமா? என்பதை நாடாளுமன்றத்தில் ஆலோசிக்க வருமாறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரை இங்கு அழைக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். அவருடன் அனைவரும் கலந்தாலோசிக்கலாம். ஒப்பந்தத்தை மாற்றுவதற்கான வழிகள் இருந்தால் அதனை எவ்வாறு செய்யலாம் எனக் கூறுங்கள். நல்ல திருத்தங்களை நாம் ஏற்றுக்கொள்வோம். இருப்பினும் தற்போதுள்ள ஒப்பந்தத்துக்கு அமைவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.” – என்றார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ், சிரேஷ்ட பிரதி சுங்கப் பணிப்பாளர் ஆர்.டி.பெரேரா, உதவி சுங்க பணிப்பாளர் சுதத்த சில்வா உள்ளிட்டவர்களுடன் சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஒட்டகத்துக்கு இடம் கொடுத்தால்...!

ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சியினர் உணர்வுபூர்வமாக அறிந்து கொள்ளும் தெளிவான நிலைமை இன்று முதல் ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரே ஓர் எம்.பியாக நாடாளுமன்றத்துக்கு இம்முறை வந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதிப் பதவியை ஒப்படைத்ததன் விளைவை மொட்டுக் காட்சி பாடமாக படித்து உணரும் காலம் வந்துவிட்டது.

ஏற்கனவே மொட்டுக் கட்சியின் பட்டியலில் தேர்தலில் நின்று எம்.பியான பலர் மொட்டுத் தலைமையிலான அரசுடன் முரண்பட்டுக் கொண்டு வெளியே போய்விட்டனர். விமல் வீரவன்ஸ, உதய கமன்பில்ல, வாசுதேவ நாணயக்கார, டலஸ் அழகப்பெரும என்று அந்தப் பட்டியல் நீண்டது.

இப்போது மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டு, ரணில் அரசின் அமைச்சர்களாகவும், இராஜாங்க அமைச்சர்களாகவும், ஆளும் தரப்பு எம்பிக்களாகவும் செயற்பட்ட பலர் மொட்டுக் கட்சியில் இருந்து பிரிந்து, ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவான தனிக் கூட்டணியாகச் செயற்படப் போகின்றார்கள்.

இன்று சனிக்கிழமை பிற்பகல் கொழும்பு ஜா எலவில் நடைபெறும் முதல் பிரசார கூட்டத்தில் அந்தக் கூட்டணி தனியாக மேடை ஏறி மக்கள் முன் வருகின்றது. ஏற்கனவே ஜனவரி முதலாம் திகதி அந்தக் கூட்டணி கொழும்பு ராஜகிரியவில் தனது புதிய அலுவலகத்தைத் திறந்து செயல்படத் தொடங்கி விட்டது. எனினும் அக்கூட்டணியில் இடம்பெறப் போகும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள் இன்று தான் பொது மேடை ஏறித் தங்களை பகிரங்கமாக அடையாளப்படுத்தப் போகின்றார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிமல் லான்ஸாவும் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் இந்தக் கூட்டணியை உருவாக்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனித்திருந்தனர். இந்த கூட்டணியில் 71 எம்.பிக்கள் இணைவர் என்று நிமல் லான்ஸா கயிறு விட்டபோதும், அதைப் பலரும் நம்பவில்லை.

ஆயினும் அந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் நளின் பெர்னாண்டோ, சுசில் பிரேமஜயந்த, பிரியங்கர ஜயரட்ண போன்றோர் நிச்சயம் மேடையேறுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர்கள் காஞ்சனா விஜயசேகர, பிரசன்ன ரணதுங்க போன்றோரும் இந்தக் கூட்டணிக்கு ஆதரவு அளிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் முக்கியம் என்னவென்றால் பொது ஜன பெரமுன (மொட்டு) கூட்டணி அரசு அதிகாரத்தில் இருக்கின்றது. அதன் அங்கத்தினர்களாக இருக்கும் அமைச்சர்களும், எம்பிக்களும் அதிலிருந்து கொண்டே தனிக் கூட்டணியாக மொட்டுவை மீறிச் செயல்பட போகின்றார்கள்.

ஆளும் தரப்பின் கட்டுக்கோப்பை நாடாளுமன்றத்தில் ஒழுங்குபடுத்துபவர் அல்லது கட்டுப்படுத்துபவர் அதன் கொறடா. அந்தக் கொறடா பதவியில் - ஆளும் தரப்பின் பிரதம கொறடாவாக - இருப்பவர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க. அவரே தனது கூட்டணியின் கட்டுப்பாட்டில்இருந்துவிடுபட்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தனிக் கூட்டணி சார்பானவராகச் செயல்படுவாராயின், நாடாளுமன்றத்தில் மொட்டுக் கூட்டணியை இனிக் கட்டிக் கையாள்வது என்பது சிரமமான விடயமே. அது சிதறிப் போவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

தாம் முன்னர் தலைவராக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் செங்கல் செங்கல்லாகப் பெயர்த்துத்தான் மொட்டுக் கட்சியை உருவாக்கிக் கட்டி எழுப்பினார் மஹிந்தர்.

அவரின் கண் முன்னாலேயே - அதை உருவாக்கிய ஏழு ஆண்டுகளுக்குள்ளேயே - அது துண்டு துண்டாக, அணி அணியாகப் பிளந்து செல்லும் காட்சியைக் காண வேண்டிய அவலம் அவருக்கும் அவரது அணியில் ஏனைய ராஜபக்ஷக்களுக்கும் ஏற்பட்டிருப்பதுதான் விதியின் விளையாட்டு.

தமது மொட்டு அணியின் கணிசமான தரப்பினர் கட்சியின் நிலைப்பாட்டை கவனத்தில் எடுக்காமல் ஜனாதிபதி ரணிலின் பின்னால் அணி திரளத் தொடங்கி விட்டமையால் வேறு வழியின்றி மஹிந்தவும் ஏனைய ராஜபக்ஷக்களும் கூட அதே வழியைத் தொடரக் கட்டாயப்படுத்தப் படுவார்கள். அதுதான் அரசியல் நெருக்குவாரம்.

ரணில் என்ற ஒட்டகத்துக்கு மொட்டுக் கூடாரத்தில் ஒண்ட இடம் கொடுத்தனர் ராஜபக்ஷக்கள். இப்போது முழுக்கூடாரத்தையும் ஒட்டகம் ஆக்கிரமிக்கும் அவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் ஜனாதிபதி ரணிலின் பின்னால் மொட்டுக் கட்சியினர் அணி வகுக்கத் தொடங்கினாலும், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக் கூட்டணித் தரப்பிலிருந்து எவரும் ரணில் அணி பக்கம் தாவவே மாட்டார்கள் என எதிர்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார். தேர்தல் நெருங்கினால்தான் நிலைமை தெளிவாகும்.



# வர்த்தக, முதலீட்டு வாய்ப்புகளுக்கான இலங்கையின் கண்காட்சி சீனாவில்!

## மார்ச்சில் சியான் மாகாணத்தின் பாவோஜி நகரில்

(ந.லோகதயாளன்)

இலங்கையின் வர்த்தகம், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் கலாச்சாரம் குறித்த கண்காட்சியொன்று மார்ச் மாதம் சீனாவின் சியான் மாகாணத்தின் பாவோஜி நகரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கும் சீன பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையில் கடந்த 23 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இது தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கலாசார துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நூறுக்கும் மேற்பட்ட தொழில்முயற்சியாளர்கள் மற்றும் அதிக வர்த்தகர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் இலங்கை உற்பத்திகளை காட்சிப்படுத்த 40க்கும் மேற்பட்ட கண்காட்சி கூடங்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளை மேம்படுத்துவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் என இங்கே இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குகொண்ட சீனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் சீன பிரதிநிதிகளை பிரதிநிதித்துவப் படுத்தி, Liang Yong, Guo Fan, Li Xiangyang, Li Fei, Zhao Xiquan ஆகியோர் கலந்து கொண்டமையுடன், இலங்கை ஏற்பாட்டாளர்களாக மாத்தளை முன்னாள் பிரதி மேயர் ஹில்மி மொஹமட், ஹர்பி சில்வா, மொஹமட் ரஷிப், கணேஷ் மகேந்திரன் மற்றும் சலன பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



# சனத் நிஷாந்தவின் மெய்ப் பாதுகாவலரின் குடும்பத்தினருக்கு ரூ.15 லட்சம் இழப்பீடு!



கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மெய்ப் பாதுகாவலர் பொலிஸ் இன்ஸ்பெக்டராகத் தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலுக்கமைய இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் குடும்பத்திற்கு 15 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை முறியடிக்கும் நடவடிக்கை வடக்கில் இருந்து ஆரம்பமாம்!

## இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு



-எஸ்.நிதர்ஷன்-

ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை முறியடிக்கும் நடவடிக்கையைத் தாங்கள் வடக்கிலிருந்து ஆரம்பித்து உள்ளார்கள் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையம் மற்றும் தென்னிலங்கை ஊடக அமைப்புக்களுடன் தொழிற் சங்கங்கள் இணைந்து யாழ் நகரில் முன்னெடுத்த ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டு மக்களது உரிமைகளைப் பறித்து, அவர்களை அடக்கி, ஒடுக்கி,அச்சுறுத்தி, அடிபணிய வைக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்த நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களே முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் ஜனநாயக உரிமையை இல்லாமலாக்குகின்ற – மக்களின் உரிமையைத் தடுக்கின்ற – புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வருகின்ற செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

மக்களின் ஜனநாயக உரிமையை மதித்து ஜனநாயகத்தை பேண வேண்டிய அரசாங்கமே இன்றைக்கு அதனை மீறிச் செயற்பட்டு வருகிறது. மக்களைப் பாதிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு அரசியல்வாதிகள் பலரும் துணை போவது வேடிக்கையானது.

ஆகையினால் மக்களுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுத்து வருகிற ஜனநாயக விரோத செயற்பாடுகளை முறியடிப்பதற்கு நாம் அனைவரும் ஒருமித்துச் செயற்பட வேண்டும்.

இதற்கமைய பல்வேறுபட்ட அமைப்புக்கள் ஓரணியாக திரண்டு யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டமொன்றை நடாத்தியிருக்கிறோம். அரசிற்கு எதிராக பலதரப்புகளும் இணைந்து வடக்கில் ஆரம்பித்துள்ள இந்தப் போராட்டம் போன்று ஏனைய இடங்களிலும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்.

மக்கள் விரோத ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை மக்களாக ஒன்றுதிரண்டு முறியடிப்போம். அதற்கு அனைவரும் தொடர்ந்து ஆதரவை வழங்க வேண்டும். – என்றார்.

# மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயார்


(ந.லோகதயாளன்)

மன்னாரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள 250 மெகாவாட்ஸ் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பான சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை மாவட்டச் செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் பல சர்ச்சைகள் முன் வைக்கப்பட்ட வேளையில் இது தொடர்பில் சுற்றுச் சூழல் தாக்கம் தொடர்பில் ஓர் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கமைய நிலைபேறான சக்தி அதிகார சபையின் ஊடாக இந்தக் காற்றாலை மூலமன 250 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி தொடர்பில் ஓர் ஆய்வு மேற்கொண்டு அதன் மதிப்பீட்டறிக்கை தற்போது வழங்கப்பட்டுள்ளது.

மூன்று மொழிகளிலும் காணப்படும் அந்த அறிக்கையானது ஒவ்வொரு மொழிலும் 292 பக்கங்களைக் கொண்டுள்ளது.






**உரலார் கேள்வி :- என்ன? பாரதப் பிரத மரையே சந்தித்து விட்டீர்கள் போல? எப்படி அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது? மோடி எப்படி இருந்தார்? அந்த அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளலாமே?**

**உலக்கையார் பதில் :-** திருவாசகத்தில் 'தாயே ஆகி வளர்த்தனை போற்றி' என்று ஒரு அடி வருகிறது. அந்த அடி எத்தனை தூரம் உண்மையானது என்பதை நான் அனுபவத் தால் பலதரம் உணர்ந்து கொண்டுள்ளேன். பொங்கல் நிகழ்ச்சியைச் சாட்டாக வைத்து என்னை எப்படியும் இறக்கி விடலாம் எனப்



பலரும் முனைந்து கொண்டிருக்க, இறைவன் மோடியைச் சந்திக்கவைத்து என் மதிப்பைத் திடீரென உயர்த்தி இருக்கிறான். இதனை இறையருள் என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது? நண்பன் ஆறு.திருமுருகன் என்னோடு தொலைபேசியில் பேசுகிறபொழுது, 'அண்ணை! உங்களச் சிலபேர் படியால இறக்கப் பார்த்தாங்கள். ஆனால் கடவுள் உங்கள திடீரென்று லிப்டால ஏத்தி விட்டுட்டார்' என்றார்.

அயோத்தியாலயக் கும்பாபிஷேகத்தை யொட்டி மோடி அவர்கள் பிரதமராய் அன்றி ஒரு பக்தனாய்க் கடுமையான விரதம் மேற் கொண்டார். பதினொரு நாள்கள் வெறுமனே இளநீர் மட்டுமே குடித்தும், வெறும் தரையில் படுத்தும் அவர் மேற்கொண்ட விரதம் பற்றி அங்குள்ளவர்கள் எல்லாம் வியந்து, வியந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த விரத ஒழுங்கின் ஒரு பகுதியாக, இராமனால் அமைக்கப்பட்ட இராமேஸ்வர ஆல யத்தையும் வழிபடுவதற்காகவே மோடி தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்தார். அந்தப் பயண ஒழுங்கின் ஒரு பகுதியாகத்தான், மோடி அவர்கள் திருச்சியில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் ஆல யத்திற்கும் வருகை தந்தார். அவ் ஆலயத்தில் அமைந்துள்ள ஓர் மண்டபத்தில்தான் கவிச்சக் கரவர்த்தி கம்பர் தனது இராமாயணத்தை அரங் கேற்றியதாகச் சொல்கிறார்கள். அதையறிந்த பிரதமர் அவர்கள் ரங்கநாதப் பெருமாளைச் சேவித்து விட்டு, அந்த மண்டபத்தையும் தான் காண வேண்டும் என்று பிரதமர் சொன்னாராம்.

அதற்கான ஒழுங்குகளை தமிழகப் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை அவர்கள் டாக்டர் பிரியா அவர்களுடைய துணை யுடன் வேகவேகமாகச் செய்திருக்கிறார். அவ் இருவரின் முடிவின்படி பேச்சாளர்களாக பேராசிரி யர் தெ. ஞானசுந்தரமும், இலங்கையிலிருந்து நானும் அழைக்கப்பட்டோம். அது தவிரக் கம்பன் பாடல்கள் சிலவற்றைப் பாடுவதற்காக புகழ்பெற்ற பாடகர் சிக்கல் குருசரண் அவர்களும், அவர்களின் குழுவினரில் மூவருமாக நாலு பேர் அழைக்கப்பட்டிருந்தனர். மொத்தம் ஏழு பேர் மட்டும் தான் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம்.

கம்ப காவியம் அரங்கேறிய கல் மண்டபத் தின் மையத்தில், பிரதமருக்கு ஓர் இருக்கை அமைக்கப்பட்டிருந்தது. அவருக்கு எதிர்ப்புறமாக இரு ஓரங்களிலும் போடப்பட்டிருந்த ஆசனங்க ளில் நானும், பேராசிரியரும் அமர்த்தப்பட்டோம். எங்கள் இருவருக்கும் நடுவில் பாடகர்களும், அவர்களது குழுவினர்களும் அமர்த்தப்பட்டனர். பேராசிரியருக்கு அருகில் நிகழ்ச்சி இணைப்பாள ரான டக்டர் பிரியா அமர்ந்திருந்தார்.

35 நிமிடங்களே மொத்தமாக எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. முதலில் 'உலகம் யாவை யும்' என்கின்ற கடவுள் வாழ்த்துப் பாடலை குரு சரண் பாட அப் பாடலுக்கான பொருளைப் பிரியா அவர்கள் ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னார். அதற்குப் பிறகு பேராசிரியர் ஞானசுந்தரம் அவர்கள் வான்மீகிக்கும் கம்பனுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி ஆங்கிலத்திலும், ஹிந்தி யிலுமாக ஒரு சிறு உரையாற்றினார். அதைத் தொடர்ந்து மேலும் மூன்று கம்பன் பாடல்கள் பாடப்பட்டு அதற்கான விளக்கமும் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு நான் பேசினேன்.

எப்போதுமே கேட்கிறவர்களின் மனநிலை



அறிந்து பேசுவது தான் என் வழக்கம். தொடர்ந்த பயணத்தால் பிரதமர் அடைந்திருந்த களைப்பை அவரது முகம் தெளிவாய்க் காட்டியது. அதனா லும், நேரம் மிக அருமையாக இருந்ததாலும் மிகச் சுருக்கமாக ஒரு சில செய்திகளை மட்டுமே

(12ஆம் பக்கம் பார்க்க)

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் சொல்ல நினைந்தேன்.

'பிரதமர் அவர்களே! நான் எனது தாய் மொழியும், எனக்குத் தெரிந்த ஒரே மொழியும், அண்மைக்காலமாக உங்களால் விரும்பப் பட்டு வரும் மொழியுமான தமிழ் மொழியிலேயே பேசப்போகிறேன். எனது கருத்தை இங்குள்ள வர்கள் உங்களுக்கு மொழி பெயர்த்துச் சொல்லு வார்கள் என நம்புகிறேன்.

வடக்கில் தாங்கள் இராமனுக்குக் கற்கோவில் அமைத்திருக்கும் இவ் வேளையில், தெற்கில் கம்பனால் இராமனுக்கு அமைக்கப்பட்ட சொற் கோவில் அரங்கேற்றப்பட்ட இந்த மண்டபத்திற்கு வருகை தந்ததன் மூலம் தாங்கள் கம்பனை மட்டுமல்லாமல், தமிழர்களையும் கௌரவித் திருக்கிறீர்கள். அதற்காக முதலில் உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் தற்போது செல்லும் இடமெல்லாம் ஏதோ ஒரு திருக்குறளைச் சொல்லி, வள்ளுவத் திற்கு மதிப்பை ஏற்படுத்தி வருகிறீர்கள். இன்று தங்களின் நேரம் மிக அருமையாக இருந்த போதும், கம்பன் தன் காவியத்தை அரங்கேற்றிய இம் மண்டபத்திற்கு வருகை தந்ததன் மூலம் கம்பனுக்கும் மதிப்பை உண்டாக்கி இருக்கி றீர்கள். இனிப் பிரதமர் வந்த மண்டபம் இது என அறிந்து, ஆலயத்திற்கு வருவோர் எல்லாம் இக் கம்பன் மண்டபத்தையும் காண வந்துகுவியப் போகிறார்கள். அதற்காகவும் உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களின் கம்பன், இராமனை அறத்தின் வடிவாகவே படைத்தான். அறம் என்பது ஒரு நாட்டினர்க்கோ ஒரு இனத்தினர்க்கோ ஒரு மொழி யினர்க்கோ ஒரு மதத்தினர்க்கோ சொந்தமான தல்ல. அது மனித குலம் அனைத்திற்கும் பொதுவானது. அதனால் தான் அறத்தின் வடி வான இராமனை உலக மக்கள் எல்லோரும் போற்றுகிறார்கள். அந்த இராமனுக்குக் கோயில் எடுத்து எங்கள் எல்லோரையும் நீங்கள் மகழ்வித்திருக்கிறீர்கள். அதற்காகவும் எங்களின் நன்றி உங்களுக்கு உரியதாகிறது.

மாண்புமிகு பிரதமர் அவர்களே! இராமாயணக் கதை அயோத்தியில் தொடங்கி கிட்கிந்தையைக் கடந்து இலங்கை வரை செல்கிறது. அதனால் தானோ என்னவோ, இந்தியாவின் வடக்கிலிருந் தும் தெற்கிலிருந்தும் மட்டுமல்லாமல், இலங்கை யிலிருந்தும் ஒருவர் இங்கு வர வேண்டுமென நினைந்தே நிகழ்ச்சி அமைப்பாளர்கள் என்னை அங்கிருந்து அழைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கிறேன்'.

இதுதான் நான் பேசியதன் சுருக்கமான சாராம்சம். அங்கிருந்த நேர நெருக்கடி, பிரத மருக்கு முன்னால் பேசுகிறோமே என்ற பதற்றம், எல்லாம் சேர்ந்து நான் நினைத்த விடயத்தைத் தெளிவாகச் சொல்ல விட்டதோ என்னவோ? தெரியவில்லை.

நான் பேசிய தமிழ் நிச்சயம் பிரதமருக்குப் புரிந்திருக்காது. ஆனாலும் என் முகபாவங்களை வைத்து நான் சொன்னதைப் புரிந்து கொண்டவர் போல இடையிடையே கைகுவித்து வணங்கி யும், புன்னகை புரிந்தும் அவர் காட்டிய பிரதி பாவங்கள் என்னைப் பெரிதும் ஆச்சரியப்படுத் தின.

நிகழ்ச்சி முடிந்ததும், என் அருகில் வந்து எனது கைகளைப்பற்றி வணக்கம் செலுத்தினார். பின்னர் தானாகக் கேட்டு எங்கள் அனைவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

முடிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகி றேன். பிரதமர் மோடி பற்றி ஏற்கனவே கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனாலும் அவரை நேரில் கண்ட பிறகு, என் மனதில் ஏற்பட்ட ஒன்றை இங்கு சொல்லியே ஆக வேண்டும்.

அவரது ஆளுமை, அனைவரையும் அணைத் துச்செல்ல நினைக்கும் அவரது போக்கு, முடி வெடுத்தால் எவருக்கும் அசைந்து கொடுக்காத அவரது மன உறுதி, நமது பாரதத்தின் ஆணிவேர் மதமான இந்துசமயத்தின் மேல் அவர் வைத் திருக்கும் அசையாத பற்று, அதனைத் துணி வோடு வெளிப்படுத்தும் நிமிர்வு என இத்தகைய தகுதிகளைக் கொண்ட, பாரதத்திற்கு தலைமை தாங்கக்கூடிய வேறொருவர் இன்றைய நிலை யில் அங்கு இருப்பார் என்று தோன்றவில்லை.

**சல்லடையார் சலிப்பு - கம்பன் சொன்ன 'அவர் தலைவர்', இவரைத் தான் குறிக்கி றதோ? மோடி மேல் மோடி கொண்டார் வாரிதியார்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- பிரதமர் சந்திப்பின் போது நீங்கள் எப்போதும் போற்றுகின்ற அண்ணா மலையாரைச் சந்தித்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-**திரும்பத் திரும்ப அண்ணாமலை அவர்களை நான் பாராட்டும் படியான கேள்விகளைக் கேட்டு, என்னை மற்ற வர்களின் கோபத்திற்கு ஆளாக்கப் போகிறீர்கள். ஆனாலும் நீங்கள் கேட்டபடியால் பதில் சொல்லத் தான் வேண்டி இருக்கிறது. 'தமிழ்நாடு பாரதிய ஜனதாக் கட்சிக்குக் கிடைத்த ஒரு வரம் தான் அண்ணாமலை' என்று நான் முன்பும் ஒருமுறை சொன்னதாக ஞாபகம். அதனை இவ்விடத்தில் மீண்டும் வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

இம்முறை நிகழ்ந்த பிரதமரின் தமிழ்நாட்டுப் பயணத்தின் போது அண்ணாமலை அவர்க ளின் உழைப்பை நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. பிரதமரின் உழைப்புப் பெரியதா?



அண்ணாமலையின் உழைப்புப் பெரியதா? என்று ஒரு பட்டிமன்றமே நடாத்தி விடலாம் போல் இருந்தது.

கம்பர் இயலுக்கும், இசைக்குமான தொடர்பு பற்றிச் சொல்லும் போது ,'பருந்தொடு நிழல் சென்றன்ன இயல் இசை பயன் துய்ப்பாரும்' என்று ஓர் உதாரணத்தைச் சொல்வார். இந்த மனிதரும் கம்பர் சொன்ன அந்த உதாரணத் தைப் போலவே பிரதமரைத் தொடர்ந்து கொண் டிருந்தார். பருந்து பறக்கும் போது அதன் நிழல் அதனைத் தொடர்ந்து செல்லும். ஆனால் அது பருந்திற்கு அருகில் ஒருக்காலும் வருவதில்லை. அப்படித்தான் அண்ணாமலையாரின் செயலும் இருந்தது.

பொதுவாகக் கட்சிக்காரர்கள் தம் தலைவருக்கு அருகில் எப்படியும் இடம் பிடித்து, அதன் மூலம் தம்மை அடையாளப்படுத்தவே விரும்புவார்கள். அந்த விடயத்தில் அண்ணாமலையவர்கள் ஓர் கரும யோகியாகவே செயற்படுகிறார். மற்ற வர்கள் போல் அல்லாமல், விதிவிலக்காய் நின்று, முடிந்தளவு பிரதமரின் அருகாமையை

(13ஆம் பக்கம் பார்க்க)

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தவிர்க்க முயல்கிறார். அவர் விலக விலகத்தான் பிரதமருக்கு அவர் மேல் விருப்பு அதிகரிக்கிறது போல.

பிரதமர் வருவதற்கு முன்பாக, அந்த இடத்திற்கு எப்படி வருகிறார் என்று தெரியாமல் வந்து விடுகிறார். போன நேரம் தொடக்கம் நாங்கள் அமர்ந்திருந்த கம்பகாவிய அரங்கேற்ற மண்டபத்தில் அவரைத் தேடித் தேடிப் பார்த்தேன். எங்கும் காண முடியவில்லை. பிரதமர் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக எங்கிருந்தோ மின்னல் போல வந்து சேர்ந்தார். இவர் முகத்திலும் இரண்டு நாள் பயணக்களைப்பு எழுதப்பட்டிருந்தது. வந்தவர் பாதந் தொட்டு மூத்தவர்களிடம் ஆசி பெற்றார். பிறகு திடீரென்று எங்கோ ஓடி மறைந்து போனார். பிரதமர் எங்களோடு இருக்கும் வரை அந்தப் பக்கம் கூட அவர் வரவில்லை.

பிரதமர் வந்து எங்களைச் சந்தித்துச் சென்ற பின், மீண்டும் எங்கிருந்தோ ஓட்டமும் நடையுமாக வந்தவர், நன்றி கூறல், புகைப்படம் எடுத்தல் என்பவற்றைச் சில நிடங்களில் முடித்துக் கொண்டு, எங்களது பதில் நன்றிகளைக் கூட நின்று ஏற்காமல் திடீரென எங்கோ சென்று மறைந்து போனார்.

இப்படியான ஆளுமையும், ஆற்றலும், செயல் திறனும், நிதானமும், சொல்வன்மையும், கொண்டதற்புகழை விரும்பாத ஒரு தொண்டன் மட்டும் கிடைத்தால் எந்த எதிர்ப்பையும் முறியடித்து எவரும் வெற்றிநடை போடலாம் என்பது மட்டும் உறுதி.

தன்னை அழைத்ததற்காகத் தான் இவர் அண்ணாமலையைப் புகழ்கிறார் என்று இனிச் சில 'குசும்பர்கள்' தொடங்கி விடுவார்கள். எவன் எதனைச் சொன்னால் எனக்கென்ன? அது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. அண்ணாமலையின் தொடர்பு நிச்சயம் எனக்குப் பெருமை தருகிறது.

**சல்லடையார் சலிப்பு - கெட்டிக்காரர்களை மடக்கித் தனக்காக்குவதில் வாரிதியார் ஒரு கெட்டிக்காரர் தானுங்கோ...**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- என்ன? நீங்கள் இவ்வளவு எழுதியும் உங்களது சுமந்திரன் தோற்று விட்டாரே? சிறீதரனின் வெற்றி பற்றி என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** உங்களுக்கு விளங்கியது அவ்வளவுதான்!. முன்னைய கேள்வி ஒன்றிற்குப் பதில் உரைக்கும் போது, தலைமைப் பதவிக்கான சுமந்திரனின் தகுதிகளை எடுத்துரைத்திருந்தேன். அப் பதிலில் சிறீதரனுக்கு அமைந்திருக்கும் வேறு தனித்த சில தகுதியையும் நான் சொல்லாமல் விடவில்லை. அப் பதிலில் இவ்விருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, இணைந்து கட்சியைக் காக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருந்தேன். அந்த எனது கருத்து எடுபடவில்லை என்பது உண்மைதான்.

சிறீதரனும் என் மேல் அன்பு கொண்டவர் தான். அதனால் சிறீதரனின் வெற்றியில் எனக்கு எந்தவித மனவருத்தமும் இல்லை. பதிலுக்கு மகிழ்ச்சிதான்! ஆனால் ஒன்று, தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிற சிறீதரன் இன விடுதலை என்கின்ற காரியத்திலும், கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியிலும் வெற்றிபெற்றுக் காட்டவேண்டும். அப்போது தான் அவர் பெற்ற வெற்றி மதிப்புக்குரியதாகும்.

சிறீதரன் இப்போது மற்றவர்களின் ஆதரவைப் பெற்றுப் போட்டியில் வென்றிருக்கிறார். இனி அவர்களின் நம்பிக்கையைப் பெற்று அவர் வென்றாக வேண்டும். முதற்காரியத்தை விட இதில் தான் அதிக சவால்கள் இருக்கப் போகின்றன. அதிலும் அவர் வெற்றி பெறுவாரானால் நான் மட்டுமல்ல தமிழினம் முழுவதுமே



மகிழ்ச்சி அடையும் என்பது நிச்சயம்.

என்ன நடக்கப் போகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம். இப்போதைக்குத் தேர்தல் வெற்றிக்காக மட்டும் அவருக்கு எனது நல் வாழ்த்துகள்.

**சல்லடையார் சலிப்பு - வெற்றிமீது வெற்றி வந்து அவரைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உம்மைச் சேராது! ஹீ..ஹீ...ஹீ இது எப்படிங்கோ?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்கள், கோயிலைக் கட்டி முடிக்காமல் இராமர் சிலையைப் பிரதிஷ்டை செய்தது தவறு என்கிறாரே?**

**உலக்கையார் பதில் :-** அவரின் மேல் எனக்கு ஓர் மரியாதை உண்டு. கலைஞர் குடும்பத்துக்குள் இருக்கும் ஆயிரம் பதவிச் சண்டைகளுக்கு இடையில், ஏதோ விதத்தில் எல்லோரையும் சமாளித்து இன்று வரை அரசியலில் நின்று பிடிக்கும் அவரது திறமையை மதிக்காமல் இருக்க முடியாது. அறிவார்த்தமான பெண்மணி.

ஆனால் இந்த விடயத்தில் அவர் சமனிலை தவறிக் காணப்படுவது வியப்பாய் இருக்கிறது. அவர்களது கட்சினருக்கு இறை நம்பிக்கை இல்லை(குறிப்பாக இந்துமத இறை நம்பிக்கை). அப்படிப்பட்ட கட்சியில் இருந்து கொண்டு, கோவில் கட்டுவது பற்றியும் கும்பாபிஷேகம் நடத்துவது பற்றியும் ஏன் அவர் பேச நினைக்கிறார் என்று தெரியவில்லை. தெரியாத்தனமாக வாயைக்



கொடுத்துப் பலபேரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார். தேவையில்லாத வேலை இது.

**சல்லடையார் சலிப்பு - 'காய் மொழி' ஹீ..ஹீ...ஹீ...!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖




# காசாவில் இஸ்ரேல் நடத்தும் போரில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## சர்வதேச நீதிமன்றம் உத்தரவு

இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்காவினால் பதிவு செய்யப்பட்ட இனப்படுகொலை வழக்கிற்கு சர்வதேச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வழக்கானது, நேற்று சர்வதேச நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காசா மீதான தாக்குதலில் இனப்படுகொலை செய்ததாக தென்னாப் பிரிக்கா இஸ்ரேல் மீது வழக்கு தாக்கல் செய்தது.

இந்த நிலையில், காசாவில் இஸ்ரேல் நடத்தும் போரில் இனப் பேரழிவு தொடர்பான உரிமைகள் பாது காக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வ தேச நீதிமன்றம் நேற்று இஸ்ரேலுக்கு தீர்ப்பளித்துள்ளது.

அத்தோடு, பலஸ்தீனர்களுக்கு இனப் பேரழிவு நடவ டிக்கைகளின் போது தங்களைப் பாதுகாத்துக் கொள் ளும் உரிமை இருப்பதாகவும் சர்வதேச நீதிமன்றம் தெரிவித் துள்ளது.

மேலும், இனப் பேரழிவுக்கு எதிரான சட்டத்தின் கீழ் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய பிரிவினர் என்றும்



சர்வதேச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த மூன்று மாதங்களாக நடை பெற்று வரும் போரில் இஸ்ரேல் காசாவின் பெரும்பகுதியை தரைமட்டமாக்கி விட்டது.

1.9 மில்லியன் மக்களை தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றியுள்ளனர்.

குறைந்தது 25 ஆயிரத்து 900 பேர் கொல்லப்பட்டிருக் கின்றனர் என தெரியவந்துள்ளது.

# நைதரசன் வாயு மரண தண்டனை: அமெரிக்காவுக்கு ஐ.நா. கண்டனம்






அமெரிக்காவின் அலபாமாவில் நைதரசன் வாயுவை கொண்டு கைதி ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டிருப்பதை ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு வன்மையாக கண்டித்துள்ளது.

இந்த முறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது கொடுமைப் படுத்துவதற்கு சமம் என ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தை சேர்ந்த மத போதகர் சார்லஸ் சென்னட், அவரது மனைவி எலிசபெத்தை கடந்த 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி கொலை செய்திருந்தார்.

கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டிருந்த சார்லஸ், தனது மனைவியின் பெயரில் இருந்த காப்பீட்டு பணத்தை அடையும் நோக்கில் கென்னத் ஸ்மித் மற்றும் ஜான் பாரஸ்ட் பார்க்கர் ஆகிய இருவருக்கும் தலா ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கொடுத்து எலிசபெத்தை கொல்ல உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, இந்த கொலை சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதை தொடர்ந்து, எலிச பெத்தின் கணவர் சார்லஸ் பொலிஸாரால் கைது செய்யப்ப டுவதற்குள் தற்கொலை செய்து கொண்டார்.

இதனை தொடர்ந்து, கைது செய்யப்பட்ட இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த கொலையின் முக்கிய குற்றவாளியான ஜோன் பாரஸ்ட் பார்க்கருக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், கெனத் ஸ்மித் எனும் மற்றைய குற்றவாளிக்கு நேற்று நைதரசன் வாயுவைக் கொண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், நைதரசன் வாயு மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் வோல்கர் டர்க் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அத்துடன், இதற்கு முன்னர் சோதித்துப் பார்க்காத முறை யில் கெனத் ஸ்மித்க்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட் டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றுவது கொடுமைப்படுத்துவதற்கு ஈடாகலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# சென்னையில் பவதாரிணியின் உடலுக்கு திரையுலகினர், பொதுமக்கள் அஞ்சலி

## தேனியில் அடக்கம் செய்ய ஏற்பாடு

பிரபல இசையமைப்பாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜாவின் மகளும் பின்னணி பாடகியுமான பவதாரிணியின் உடல் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பவதாரிணியின் உடல் தேனி மாவட்டம் லோயர்கேம்ப்பில் உள்ள இளையராஜாவின் பங்களாவில் இன்று அடக்கம் செய்யப்பட உள்ளது என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லோயர்கேம்ப் குருவனூத்து பாலம் அருகே இளையராஜாவுக்கு 2.5 ஏக்கர் பரப்பளவில் பங்களா உள்ளது. இங்கு இளையராஜா தனது குடும்பத்தினருடன் தங்குவதற்கான அறைகள், தியான மண்டபம் உள்ளிட்டவை உள்ளன. இந்த வளாகத்தில் இளையராஜாவின் அம்மா சின்னத்தாய், மனைவி ஜீவா ஆகியோரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பவதாரணியின் உடலும் இங்கு அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னையில் திரைப்படத்துறையினரின் அஞ்சலிக்குப் பிறகு பவதாரிணியின் உடல் இங்கு கொண்டு வரப்பட உள்ளது.

இதுகுறித்து திரையுலகினர் கூறுகையில்,

“இளையராஜாவுக்கு சொந்த ஊர் தேனிமாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரம் ஆகும். இருப்பினும் தமிழக எல்லையான கூடலூர் அருகே லோயர்கேம்ப்பில் அவருக்குச் சொந்தமான பங்களா உள்ளது. தீபாவளி, தாயார் மற்றும் மனைவி நினைவுநாளில் இங்கு குடும்பத்தினருடன் செல்வார்கள். பவதாரிணியின் உடலும் இங்கு அடக்கம் செய்யப்பட உள்ளது” என்றனர்.

மறைந்த பின்னணிப் பாடகி பவதாரிணி, கடந்த சில மாதங்களாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சைகளுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இந்த நிலையில், கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தனது 47 ஆவது வயதில் சிகிச்சை பலனின்றி காலமானார்.

பிரேத பரிசோதனைக்கு பின்னர் மறைந்த பவதாரிணியின் உடல் கொழும்பிலுள்ள தனியார் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நேற்று மாலை இலங்கையில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பவதாரிணியின் உடலுக்கு சென்னை தியாகராய நகரிலுள்ள இசையமைப்பாளர் இளையராஜாவின் வீட்டில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளான இவர், கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா ஆகியோரின் சகோதரியாவார்.

மறைந்த பவதாரிணி, ராசய்யா திரைப்படத்தின் மூலம் திரையுலகில் பாடகியாக அறிமுகமானார்.

கடந்த 2000 ஆம் ஆண்டில் வெளிவந்த ‘பாரதி’ திரைப்படத்தில் பாடிய ‘மயில் போல பொண்ணு ஒண்ணு’ எனும் பாடலுக்காக தேசிய விருது பெற்றதோடு, மக்கள் மனதிலும் இடம்பிடித்தார்.

‘தேடினேன் வந்தது’, ‘காதலுக்கு மரியாதை’, ‘அழகி’, ‘பிரண்ட்ஸ்’, ‘தாமிரபரணி’ உள்ளிட்ட பல திரைப்படங்களிலும் பாடியுள்ளார்.

காற்றில் வரும் கீதமே, ஒளியிலே தெரிவது, தென்றல் வரும், போன்றவை அவருடைய தனித்துவம் மிக்க குரலுடன் வெளியான சில பாடல்களாகும்.

“மித்ர் மை பிரண்ட்” , பிர் மிலேங்கே ஆகிய ஹிந்திப் படங்களுக்கும் தமிழில் இலக்கணம், அமிர்தம் உட்பட சில திரைப் படங்களுக்கும் அவர் இசையமைத்துள்ளார்.

இதேவேளை, பவதாரிணியின் மறைவுக்கு தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் உள்ளிட்ட பலரும் தமது ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டு வருகின்றனர்.














# சென்னையில் குடியரசு தினம் நிகழ்வு: தேசியக் கொடி ஏற்றினார் ஆளுநர் ரவி

இந்தியா முழுவதும் 75 ஆவது குடியரசு தினம் நேற்று கொண்டாடப்பட்டது . இதையொட்டி, சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை அருகே அமைக்கப்பட்டுள்ள கொடிமரத்தில் தேசியக் கொடியை ஆளுநர் ஆர்.என்.ரவி முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஏற்றி வைத்தார். அப்போது தேசிய கீதம் இசைக்கப்பட, ஹெலிக்கொப்டர் மூலம் மலர் தூவப்பட்டது.

முன்னதாக, முதல்வர் ஸ்டாலின், போக்குவரத்து பொலிஸ் படையினரின் வாகன அணிவகுப்புடனும், அவரை தொடர்ந்து ஆளுநர் ரவி, இராணுவ வாகன அணிவகுப்புடனும் விழா நடைபெறும் இடத்துக்கு வருகை தந்தனர். இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, இராணுவம், கடற்படை, விமானப்படை, கடலோர காவல் படை, தமிழக பொலிஸ் துறையின் பல்வேறு பிரிவுகள், தேசிய மாணவர் படை, வனம், சிறை, தீயணைப்பு துறைகளின் படைப்பிரிவினர், பள்ளி, கல்லூரி பேண்டு வாத்திய குழுவினர், சாரண, சாரணியர், ஊர்க்காவல் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு நடைபெற்றது.

பின்னர், தமிழக கலை பண்பாட்டு துறை சார்பில் பல்வேறு மாநில கலை குழுவினரின் கலை நிகழ்ச்சிகள், பாடசாலை, கல்லூரி மாணவிகளின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதையடுத்து, முப்படைகளின் கவச வாகனங்கள், அரசுத் துறைகளின் திட்ட விளக்கங்கள் அடங்கிய 21 அணிவகுப்பு வாகனங்கள் வலம் வந்தன.

இதைத் தொடர்ந்து, மத நல்லிணக்கத்துக்கான கோட்டை அமீர் விருது, திருத்திய நெல் சாகுபடிக்கான விருதுகள், மதுவிலக்கு தொடர்பான காந்தியடிகள் பதக்கங்கள், சிறந்த காவல் நிலையத்துக்கான விருது உள்ளிட்ட விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இந்த விழா நடைபெறும் பகுதியில் நேற்று 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டது. சென்னையில் பாதுகாப்பு பணியில் 7,500 பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.









# ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு மகா சங்கத்தினர் ஆதரவு தெரிவிப்பு

மக்கள் நலனுக்காக முன்னெடுக்கும் அனைத்து திட்டங்களிலும் ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினரின் ஆதரவு கிடைக்கும் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தரும், அரச சேவை ஒன்றிணைந்த தாதியர் சங்கத் தலைவரும், மேல் மாகாணத்துக்கான பிரதான சங்கநாயக்கருமான முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் ஜனன தினமான நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டிருந்தார்.

அந்த நிகழ்வில் இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் உரையாற்றிய போதே முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

”எனவே பஞ்ச சீல கொள்கையை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தையும் நீங்கள் உருவாக்கித்தர வேண்டும்.

அத்துடன் பௌத்த சாசனத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் ஏராளமான விடயங்கள் நடந்து வருகின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

அரசாட்சி இல்லாவிட்டாலும் இந்நாட்டின் அரசராக நீங்களே உள்ளீர்கள். நீங்கள் நினைத்ததை செய்யக்கூடியவர். சொல்வதை செய்யும் தலைவர். நீண்ட நேரம் கலந்தாலோசிப்பதில்லை. நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வீர்கள். ஆனாலும் இன்று மகா சங்கத்தினர் சிலரின் செயற்பாடுகள் பௌத்தர்ளின் மனதை புன்படுத்துவனவாகவும் அதிருப்தியை ஏற்படுத்துவவனவாகவும் அமைந்திருக்கின்றன.



இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு மகா சங்கதினரை முன்நிறுத்திய சங்க மறுசீரமைப்பை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக மகா சங்கத்தினர் முன்னிலையாக வேண்டும். அதன் போது உங்களுடைய ஒத்துழைப்பு கிடைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். அதே போல் பல்வேறு விடயங்களை கூறி மக்கள் எண்ணங்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. அது தொடர்பிலான விரிவான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற வேண்டும்.



சாசனத்தை பாதுகாத்தல், மக்கள் பாதுகாப்பு உள்ளிட்ட மக்கள் நலன் கருதிய அனைத்து செயற்பாடுகளிலும் மகா சங்கத்தினர் உங்களுக்கு ஆதரவளிப்பர்.

எனவே பஞ்ச சீல கொள்கையை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தையும் நீங்கள் உருவாக்கித்தர வேண்டும். அதேபோல் எமது தாதியர் சங்கத்திற்கு மறக்க முடியாத பணியை ஆற்றியுள்ள நீங்கள் தாதியருக்கான டிப்ளோமாவை வழங்கினீர்கள்.

பல்கலைக்கழகங்கள் தொடர்பிலான பிரச்சினைகள் நீண்ட காலம் நிலவிய நிலையில் நீங்கள், உங்கள் பேனா முனையில் அதற்கான தீர்வை வழங்கினீர்கள். அவற்றை நாங்கள் என்றும் மறக்கப்போவதில்லை.” – என்றார்.

அத்துடன் இந்நிகழ்வில் மகா சங்கத்தினர், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தொழிற்சாலைகள் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, நாடாளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்தன உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.



# ரூ.300 கோடி செலவில் 25 கி.மீ. நீளமான உகண - மகாஓய வீதி காபெட் வீதியாகும்

## செப்பனிடும் பணிகள் ஆரம்பம்!!

– எஸ்.எஸ்.அமிர்தகழியான் –

பதுளை, செங்கலடி மீள்நிர்மான மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் 25 கிலோ மீற்றர் நீளமான அம்பாறை உகண – மகாஓய வீதியை காபெட் வீதியாக செப்பனிடும் பணிகள் சவூதி அரேபிய நாட்டின் நிதி உதவியுடன் சுமார் 300 கோடி ரூபா செலவில் நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி திட்டம் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ.சந்திர காந்தனின் கோரிக்கைக்கு அமைவாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான டபிள்யூ. டீ.வீரசிங்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன், மாவட்ட அமைப்பாளர் என்.திருநாவுக்கரசு மற்றும் துறைசார் அதிகாரிகள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





















# சனத் நிஷாந்தவின் ஜீப் விபத்துக்குள்ளானபோது 160 கி.மீ. வேகத்தில் சென்றுகொண்டிருந்ததாம்!

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நேற்று அதிகாலை கட்டுநாயக்க அதிவேக நெடுஞ் சாலையில் இடம்பெற்ற மிக மோச மான வாகன விபத்தில் உயிரிழந் தார். விபத்துச் சமயம் அவரது ஜீப் 160 கிலோமீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருந்தது எனத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

விபத்து தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் கார் சாரதி பிரபாத் எரங்க, வெளியிட்ட வாக்குமூலம் தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

“விபத்தின் போது அமைச்–சர் நன்றாக உறங்கிவிட்டார்.160 கிலோமீற்றர் வேகத்தில் ஜீப் சென்று கொண்டிருந்தது. நான் இடது பக்கம் வாகனத்தை திருப்பும் போது சுற்று வதை போல் உணர்ந்தேன். அதன் பிறகு என்ன நடந்தது என்றே தெரிய வில்லை.” – எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது அவர் குறிப்பிட்டார்.

மேலும், “இடது பக்கத்திலிருந்து ஒரு காரை முந்திச் சென்றேன். நான் ஜீப்பை வலது பாதையில் நகர்த்த முற்பட்ட போது, முன்னால் சென்ற கண்டெய்னர் மீது மோதியது. ஜீப்பின் கட்டுப்பாட்டை இழந்தேன். அது தடுப்பில் மோதி நின்றது” என்றார்.

விபத்து இடம்பெற்ற போது, வாகனம் மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்துள்ளதாக வும் விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

இந்தச் சாரதி, ராகமயிலுள்ள கொழும்பு வடக்கு போதனா வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் தலை மற்றும் வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந் தது.

சனத் நிஷாந்தவின் உடல், பொது மக்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பொரளையில் உள்ள ஜயரத்ன மலர் சாலையில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் நேற்று மாலை புத்தளத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டது.





# புல்மோட்டை வைத்தியரின் இடமாற்றத்தை ரத்துசெய்யுமாறு கிழக்கு ஆளுநர் பணிப்பு!

(அபு அலா)

திருகோணமலை – புல்மோட்டை தள வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த வைத்திய பொறுப்பதிகாரிக்கு எந்த பதிலீடுகளும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

புல்மோட்டை தள வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வந்த வைத்தியர் எம்.எ.எம். மொஹைதீனுக்கு மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இடமாற்றத்தில், எந்த பதிலீடுகளும் இல்லாமல் இடம்பெற்றது. இந்த இடமாற்றத்தை, நிறுத்தக்கோரி புல்மோட்டை பிரதேசத்திலுள்ள பல அமைப்புக்களும், பொதுமக்களும் இணைந்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை நேற்று முன்தினம் சந்தித்து இதுதொடர்பான விடயங்களை முன்வைத்தனர்.

குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமாகிய ஏ.முபாறக் தலைமையில், புல்மோட்டை காட்டுத்தென்னை விவசாய சம்மேளனம், புல்மோட்டை அல் – மஸ்ஜிதுல் நூறானியா பள்ளிவாசல் நிர்வாகம் உள்ளிட்ட அப்பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில், எங்களது வைத்தியசாலைக்கு 7 வைத்தியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. ஆனால், 3 வைத்தியர்கள் மாத்திரமே கடமை புரிந்து வருகின்றனர். இந்நிலைமையில், வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வருகின்ற வைத்தியர் எம்.எ.எம். மொஹைதீனின் வருடாந்த இடமாற்றத்திலும், அவருக்குப் பதிலாக எந்த பதிலீடுகளும் இல்லாமல் இடம்பெற்றுள்ளது. அவரும் சென்றால் 2 வைத்தியர்கள் மாத்திரமே இருப்பார்கள். இது எங்களுக்கும் எங்கள் பிரதேசத்தில் வாழ்கின்ற 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கும் செய்யும் பாரிய அநீதியாகும் என்றும் இந்த இடமாற்றத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஆளுநரிடம் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

குறிப்பாக, வைத்தியர் எம்.எ.எம். மொஹைதீன் கடந்த COVID-19 காலப்பகுதியில் வைத்தியர்கள் ஒருவருமே இல்லாத சந்தர்ப்பத்திலும், தன்னுயிரையும் பாராது தனியாளாக நின்று, எந்த விடுமுறையும் பெற்றுக் கொள்ளாமல் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த வைத்தியர் என்ற விடயத்தையும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், உரிய வைத்தியரின் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர்களுக்கு உத்தரவிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில், புல்மோட்டை காட்டுத்தென்னை விவசாய சம்மேளனத்தின் தலைவர் ஏ.எல்.அஸீஸ், அதன் செயலாளர் ஏ.எல்.அப்துல் சலாம் மற்றும் புல்மோட்டை அல் – மஸ்ஜிதுல் நூறானியா பள்ளிவாசல் நிர்வாகத்தின் தலைவர் கே.ரீ.மசூர்டீன், அதன் செயலாளர் ஐ.எம்.வசீம், புல்மோட்டை ஜம்மியத்துல் உலமாசபை கிளையின் தலைவர் எம்ஏ.சி.சலாம் மௌலவி புல்மோட்டை விவாகப் பதிவாளர் ஏ.எல்.ஏ.கலீல், புல்மோட்டை தக்வா பள்ளிவாசல் தலைவர் மஹ்றூப் அன்சார், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாண ஆளுநரின் சேவைகளைப் பாராட்டி உரிய அமைப்புக்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.










# நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தால் பல்வேறு சர்ச்சைகள் கிளம்பலாம்

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நிறைவேற்றப்பட்ட இணையத் தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்தும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவும் ஒரே ஒரு எம்.பியை கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியுமே இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன. நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிராகவே வாக்களித்திருந்தன.




ஆசிய இணைய சேவைகளின் கூட்டமைப்பு உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளும் சிவில் அமைப்புகளும் இந்தச் சட்டம் கடுமையான திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கோரியிருந்தன.

உயர்நீதிமன்றமும் சட்டமூலத்தில் 34 சரத்துகளை திருத்தங்களுக்கு உட்படுத்த வேண்டுமென வியாக்கியானம் வழங்கியிருந்தது. பல தரப்பினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசாங்கம் சில திருத்தங்களுடன் சட்டமூலத்தை நிறைவேற்றியிருந்தது.

இதனால் அரசாங்கத்துக்கு கடும் எதிர்ப்புகள் வெளியாகி வருகின்றன. சட்டமூலத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டு சான்றுப்படுத்திய பின்னர் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தலையிடியாக மாறக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் நவம்பர் மாத இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நாட்டில் நடைபெற வேண்டும். அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே இருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது உறுதி என்பதால் நிகழ்நிலை காப்புச் சட்டத்தால் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடுகள் அரசாங்கத்தக்கு தலையிடியாக மாறுமென அரசியல் விமர்சகர்கள் கூறும் பின்புலத்தில் சிவில் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் போராட்டங்களை நடத்த ஆலோசனைகளை நடத்தி வருகின்றன.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்றை நடத்தியது. வரும் நாள்களில் அரசாங்கத்துக்கு எதிர்ப்புக் காட்டும் பல போராட்டங்கள் நாடு முழுவதும் ஒழுங்குசெய்யப்பட்டு வருகின்றன.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை அங்கீகரிக்க முன் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு சபாநாயகர் அழைப்பு விடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூறியுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, உச்சநீதிமன்றம் பரிந்துரைத்த சில திருத்தங்களுக்கு அரசாங்கம் இடமளிக்காததால் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் குறித்து விவாதிக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் வலியுறுத்த தமது கட்சி தீர்மானித்துள்ளது. - என்றார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எம்.பிகள் குழு விரைவில் சபாநாயகரை சந்தித்து கலந்துரையாட உள்ளது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், சபாநாயகரை சட்டமூலத்துக்கு சான்றளிக்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளார்.









# நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு அமெ.,பிரிட்டன், கனடா எதிர்ப்பு

## மேலும் பல நாடுகள் கவலை தெரிவிப்பு

இணையதளங்கள் மற்றும் சமூக வலையதங்களை ஒழுங்குப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை கடந்த நாடாளுமன்ற அமர்வில் நிறைவேற்றியுள்ளது.

சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது முதல் அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. சமூக வலைதளங்கள் மற்றும் இணையதளங்கள் ஊடாக இலங்கை டிஜிட்டல் பொருளாதார பன்மடங்கு வளர்ச்சியை அடைந்துள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும், சமூக ஊடகப் பயன்பாட்டாளர்களும், இணைய தளங்களும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உதயமாகும் என நாட்டில் பல டிஜிட்டல் செயல்பாட்டாளர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில், சர்வதேச நாடுகளும் அரசாங்கத்தின் இந்த புதியச் சட்டம் தொடர்பில் கவலைகளை வெளியிட்டு வருகின்றன.

ஏற்கனவே கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் இந்தச் சட்டத்துக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

இப்போது, இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக் –

"இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பான நாடாளுமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்தோம். கருத்துச் சுதந்திரம் மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கம் குறித்து சிவில் சமூகம் மற்றும் தொழில்துறை கவலைகளை நான் அறிந்திருக்கிறேன். இரண்டையும் பாதுகாக்கும் வகையில் இது செயல்படுத்தப்படுவது முக்கியம்."– எனத் தமது எக்ஸ் தளத்தில் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

"இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டம் பொருளாதார மீட்சிக்கு தீங்கு விளைவிக்கும் என்பதோடு ஜனநாயக சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நியாயமான உரையாடலைக் கட்டுப்படுத்தும் சாத்தியம் உள்ளது என்ற கவலைகளைப் பகிர்ந்து கொள்கிறோம்." என இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷ் தெரிவித்துள்ளார்.

மேலும் பல நாடுகள் அரசாங்கத்தின் இந்தச்சட்டமூலம் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இம்மாதத்தில் 40 பேருக்கு டெங்கு!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இவ் வருடம் முதல் 24 நாள்களில் 40 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர் என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு மற்றும் கல்வயல் கிராமங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும்,

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத 30குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சியில் டெங்கின் தீவிரத் தன்மையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 29 தொடக்கம் 31வரையான வரையான மூன்று தினங்கள் கோவிற்குடியிருப்பு, நாவற்குழி மற்றும் மட்டுவில் கிராமங்களில் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட இருக்கின்றன எனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணை புதன், வியாழனுக்கு

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் 31 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி முதலாம் திகதிகளில் (புதன், வியாழக்கிழமைகளில்) தொடர்ந்து முன்னெடுப்பதற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன,அர்ஜுன ஒபேசேகர உள்ளிட்ட ஐவரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், புதிய பயங்கரவாத அமைப்பொன்று மீண்டும் உருவாகும் என கருதக்கூடிய சூழல் காணப்படாத பின்னணியில், இவ்வாறான சட்டமூலத்தின் ஊடாக எதிர்க் கருத்துகளை ஒடுக்குவதற்கே அரசாங்கம் முயற்சிப்பதாக, மனுதாரர்களின் சார்பில் விடயங்களை முன்வைத்தசட்டத்தரணிகள்நீதிமன்றில்தெரிவித்தனர்.

இலங்கை நாடு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அடையாளப்படுத்தப்படுவதன் காரணமாக, மக்களை பாதுகாத்தல், அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் ஆகியன அரசமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயற்பாடுகளுக்கு எதிராக குரலெழுப்பும் மக்களை ஒடுக்குவதற்கு இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில உட்பிரிவுகள், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமாக மாத்திரமின்றி, சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது நீதிமன்றத்திடமே காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி நய்ஜல் ஹெடி, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி லக்ஷான் டயஸ், சட்டத்தரணி தனுக நந்தசிறி, சிரேஷ்ட சட்டத்தரணி ஷாந்த ஜயவர்தன உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தனர்.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் முன்னிலையாகியிருந்தனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 27.01.2024

## மேஷம்

நீங்கள் இன்று கோவில் விழாக்களில் பங்கு கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். மேலும் திருப்தி கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனை சமாளிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றத்தில் பிரச்சினைகள் காணப்படும். இதற்கு உங்களிடம் காணப்படும் அகந்தை போக்கே காரணமாகும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப் படலாம். இதனால் தலைவலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## ரிஷபம்

இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். ஆற்ற வேண்டிய செயல்கள் அதிகமாக இருக்கும். அதிக முயற்சியின்றி உங்கள் இலக்குகளை அடைவீர்கள். பரந்த நோக்கு டன் இருப்பீர்கள். புதிய கருத்துகளை கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆர்வம் அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே பணிகளை முடிப்பீர்கள். இதற்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் பிரியமானவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். அதிகமான பணம் சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## மிதுனம்

இன்று மகிழ்சிகரமான நாளாக அமை யாது. வெற்றியை நோக்கி உங்கள் இலக்குகளை அமைத்துக் கொள்வது சிறந்தது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பா தீர்கள்.

பணியில் யதார்த்தமான அணுகு முறை வெற்றியை அளிக்கும். இதன் மூலம் எளிதில் வெற்றி பெறலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனை பரஸ்பரம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் ஏற்படும். அது சுமையாக காணப்படும். கவலையை உண்டாக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படும்.

## கடகம்

இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி மிகவும் அவசியம்..

பணிச்சூழல் திருப்திகரமாக இருக் காது. இன்று காணப்படும் பணி இறுக்கம் உங்களை கவலைக்குள்ளாக்கும். உங்கள் பணி வழிமுறைகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப் படும். வாக்குவாதங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது. பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் செலவு செய்ய வேண் டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக செலவு ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத் தும்.

## சிம்மம்

இன்று ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்காது. இதனால் தன்னம்பிக்கை யும் உறுதியும் இழந்து காணப்படு வீர்கள். மாற்றங்களும் பயணங்களும் காணப்படும். இன்று உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை முறையாக செய்ய வேண்டும். பணிச்சுமை காரணமாக இன்று பணியில் தவறுகள் நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவீர் கள். இதனை தவிர்த்தல் வேண்டும். பக்குவமான அணுகுமுறையோடு அன்பாக பழக வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

## கன்னி

இன்றைய நாள் வரவேற்கத்தக்கதாக இருக்காது. சில சமயங்களில் பொறுமை இழப்பீர்கள். உணர்ச்சி வசப்படுவீர்கள். அந்தச் சமயங்களில் முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எந்த விஷ யத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது நல்லது.

உங்கள் செயல்திறனில் நம்பிக்கையோடு காணப்படு வீர்கள். உங்களின் பணியாற்றும் முறை உங்கள் மேலதி காரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு உள்ளது. பரஸ்பர அன்பு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பயனுள்ள வகையில் சேமிப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

## துலாம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமையும். புதிய தொடர்பு களை ஏற்படுத்திக்கொள்வீர்கள். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இன்று உங்கள் விருப்பம் நிறைவேறும் நாள்.

உங்கள் சக பணியாளர்கள் ஆதரவாகவும் உதவி கரமாகவும் இருப்பார்கள். புதிய வேலைக்கான வாய்ப்பு உள்ளது. பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் சமயோசித புத்தி காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று பலன்கள் தாமதமாக கிடைக் கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. இன்று எதையும் எதிர் பார்க்காதீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணியாற்றும் முறையை திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

சமநிலையும் நகைச்சுவை அணுகுமுறையும் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள உதவும். உங்கள் பிரியமானவரிடம் பேசும் போது கவனமாகப் பேசவும்.

நிதி வளர்ச்சி இன்று மகிழ்ச்சிகரமானதாக காணப் படாது. கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம்.

உங்கள் தாயின் சிறிய உடல் நலப் பிரச்சினை ஒன் றிற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.01.2024



தனுசு

ஆன்மீக நாட்டம் வளர்ச்சியையும் ஆறுதலையும் தரும். இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க புது வழிகள் காண்பீர்கள். அவசர முடிவுகள் எதையும் எடுக்காதீர்கள். அதனால் எந்தப் பயனும் கிடைக்காது.

உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் செய்ய வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தையின்றி பழக வேண்டும். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மனம் திறந்து கூற வேண்டும்.

இன்று நிதியில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று காணப்படும் பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மன உளைச்சல் மற்றும் கால் வலிக்கான சாத்தியம் உள்ளது.



கும்பம்

இன்று ஆன்மீக அணுகுமுறையை நீங்கள் பற்றிக்கொள்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கையால் சாதனை புரிவீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும் நாள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகளை அமைதியாக மேற்கொள்வீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்.

உங்களின் அனுசரணையான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும். எனவே இன்றைய நாள் இனிமையாக இருக்கும். உறவில் திருப்தி நிலவும்.

இன்று பண வளர்ச்சி சிறப்பாகக் காணப்படும். சலுகை அல்லது ஊக்கத்தொகையாக இன்று பணம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.



மகரம்


இன்று சிறப்பான நாள். இன்று சுறுசுறுப்புடனும் மும்மரமாகவும் காணப்படுவீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அமைதி பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சீராக காணப்படும். நீங்கள் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் காணப்படாது. சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.



மீனம்

நீங்கள் விரும்பும் பலன்கள் கிடைக்கும் அளவிற்கு இன்றைய தினம் சாதகமாக இருக்காது. மனக்குழப்பத்திற்கு ஆளாக நேரலாம். பதற்றப்படாமல் இன்றைய பணிகளை திட்டமிடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். இன்று திட்டமிட்டு பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே நட்பான அணுகுமுறை தேவை.

பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் குறைந்து காணப்படுவீர்கள். ஜீரணம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.










# கடந்த ஆண்டில் ரூ. 300 கோடி இலாபத்தை பெற்றது லிட்ரோ!





லிட்ரோ எரிவாயு நிறுவனம் 2023 ஆம் ஆண்டில் இலாபமாகப் பெற்றுக் கொண்ட மேலும் 150 கோடி ரூபா நிதியை திறைசேரிக்கு வழங்கியுள்ளது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் இதற்கான காசோலை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

மேற்படி காசோலையை லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இதன்பின்னர், அந்த காசோலையை இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் பிரதம நிதி அதிகாரி ஸ்ரீயானி குலசிங்கவிடம், சாகல ரத்நாயக்க கையளித்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்தபோதும்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவின் வழிகாட்டலுடனும் சாகல ரத்நாயக்கவின் ஒத்துழைப்புடனும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும், அதன் பயனை மீண்டும் அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகிறோம் என்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதன்போது தெரிவித்துள்ளார்.

லிட்ரோ நிறுவனம் 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் மூன்று கோடி ரூபாவை இலாபத் தொகையாக திறைசேரிக்கு அனுப்பியுள்ளதாக முதித பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## இரு அரச கட்டடங்களை சிறைகளாக மாற்ற முடிவு

அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்றுவதற்கு நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகளில் காணப்படும் இட நெருக்கடிக்கு தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்போது 32 ஆயிரத்திற்கும் அதிகமான கைதிகள் சிறைச்சாலையில் உள்ளனர்.

எனினும், 13 ஆயிரம் கைதிகளுக்கு போதுமான இட வசதி மட்டுமே சிறைச்சாலைகளில் காணப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹெந்தலையிலுள்ள தொழுநோயாளர் வைத்தியசாலையின் சில கட்டடங்களும், மட்டக்களப்பில் அமைந்துள்ள பழைய வைத்தியசாலை கட்டடமும் இதற்காக பயன்படுத்தப்படவுள்ளன என அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது.

## கொழும்பில் அரச கட்டடங்களுக்கான வரி நிலுவை மட்டும் ஒரு கோடி ரூபா!

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஐந்நூறு கோடி ரூபா வரி நிலுவையாக உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இவற்றில் நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை, அரச நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களுக்காக அறவிடப்படவேண்டியுள்ளதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நகர அபிவிருத்திக்காக ஈடுபடுத்தக்கூடிய பாரிய அளவிலான நிதி இழக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், தமது வரித் தொகையினை வருடத்தின் முற்பகுதியிலேயே செலுத்தும் நபர்களுக்கு கழிவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.




# பெலியத்தவில் ஐவர் சுட்டுக்கொலை: மேலும் இரு சந்தேகநபர்கள் கைது

பெலியத்தவில் இடம்பெற்ற ஐவர் கொலையுடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலியின் மாகால்ல மற்றும் மிரிஸ்வல – கதுருதுவ பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 மற்றும் 35 வயதான இரு சந்தேகநபர்களிடமும் இருந்து ஹெரோயின், மோட்டார் சைக்கிள், 3 கையடக்கத் தொலைபேசிகள், கத்தி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சமன் பெரேரா உள்ளிட்டோரை கொலை செய்வதற்காக போதைப் பொருள் கடத்தற்காரரான ஊரகஹ மைக்கல் என்பவருடன், தங்காலை நீதிமன்றத்திற்கு அருகில் தாக்குதலை மேற்கொள்வதற்காக திட்டம் தீட்டப்பட்டுள்ளமை சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொஸ்கொட சுஜி என்பவரால் ஊரகஹ மைக்கல் என்பவருக்கு இந்த கொலைச் சம்பவத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தங்காலை ஐவர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரைத் தடுப்புக் காவல் உத்தரவில் விசாரணைக்குட்படுத்த நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்துள்ளது.

கைது செய்யப்பட்ட 54 வயதான சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, மேற்படி குற்றச் செயலுக்காக சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் குற்றச்செயலின் பின்னர் தப்பிச் செல்வதற்காக மறைத்துவைக்கப்பட்டிருந்த வானும் ஹக்மன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

கொலையாளிகள் வருகை தந்த ஜீப், கனேமுல்ல பகுதியில் பொலிஸாரால் அண்மையில் கைப்பற்றப்பட்டது.

கடந்த 22 ஆம் திகதி தெற்கு அதிவேக வீதியின் பெலியத்த வெளியேறும் பகுதிக்கு அருகில் ரி-56 ரக இரண்டு துப்பாக்கிகளை பயன்படுத்தி ஐவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

அபே ஜன பல கட்சியின் தலைவர் சமன் பெரேரா உள்ளிட்ட ஐவரே இந்த துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தனர்.

# புனர்வாழ்விற்காக அனுப்பி வைக்கப்பட்டவர்களில் போதைப்பொருள் கடத்தற்காரர்களும் உள்ளனராம்

கடந்த காலங்களில் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்ட கைதிகளுக்கிடையில் போதைப் பொருள் கடத்தற்காரர்கள் சிலர் உள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அவ்வப்போது வன்முறைகளை தோற்றுவிக்கின்றமை அம்பலமாகியுள்ளதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தெரியவந்துள்ள நிலையில், கைதிகளுக்கிடையில் உள்ள போதைப்பொருள் கடத்தற்காரர்களை அடையாளங்கண்டு அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுக்திய சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட போதைப்பொருளுக்கு அடிமையானர்கள் என கூறப்படும் சுமார் 300 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 22 முதல் 36 வயதுக்கிடைப்பட்ட சுமார் 100 பேர் அடங்குகின்றனர். இவர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பல சந்தர்ப்பங்களில் மோதல்களை உருவாக்கியுள்ளனர். இதனால் புனர்வாழ்வு நிலையத்தின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

போதைக்கு அடிமையான 36 வயதிற்கு மேற்பட்ட 200 பேர் கைது செய்யப்பட்டு, சேனபுர புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த புதன் கிழமை இடம்பெற்ற மோதலில் தப்பிச்சென்ற 13 பேரைத் தேடித் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 34 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்தில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலின் பின்னர் 47 கைதிகள் தப்பிச்சென்றனர்.